**கைத்தறி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**

**ஆணையிடுபவர்: திரு.டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப.,**

------

ந.க13391/2021/ஜி1 நாள். 16.11.2021

பொருள் கைத்தறி தொழில் – 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – அறிவிப்பு எண்.6 – கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணி இரகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படைக் கூலியில் 10% உயர்வும் மற்றும் அகவிலைப்படியில் 10% உயர்வும் 01.01.2022 முதல் வழங்கிட அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை 1. தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் நாள்.06.09.2021.

2. இவ்வலுவலக செயல்முறைகள் ஆணை நக.13391/2021/ஜி1, நாள்.11.10.2021.

3. அரசு கடிதம் எண்.115 கைத்தறி கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்(டி1)த் துறை. நாள்.26.10.2021.

-----

ஆணை:-

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 06.09.2021 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கை எண்.17-னை தாக்கல் செய்து வெயிட்ட அறிவிப்புகளில் ஒன்றாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கூலியில் 10% அடிப்படை கூலியிலும் மற்றும் 10% அகவிலைப்படியிலும் உயர்வு வழங்குதல் தொடர்பான பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறிவிப்பு எண்.6

"தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் அடிப்படை கூலி உயர்வு வழங்கப்படாததை கருத்தில் கொண்டும், நெசவாளர்களின் வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்

-2

D:\G-1\Wages\10%DA Circular2018.docx

பொருட்டும் கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% உயர்வும் வழங்கப்படும்"

2. படிக்கப்பட்டவை-3-ல் காணும் அரசுக் கடிதத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% (145% இருந்து 155% -மாக) உயர்வும் 01.01.2022 முதல் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இதன் மூலம் ஏற்கனவே படிக்கப்பட்டவை -2-ல் காணும் செயல்முறை அணையின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படைக்கூலியில் 10%. மற்றும் அகவிலைப்படி கூலியில் 10% உயர்வு 15.10.2021 முதல் வழங்க அனுமதி வழங்கிய செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது. மேலும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கூலியில் அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% (145% இருந்து 155% -மாக) 01.01.2022 முதல் உயர்த்தி வழங்கிட அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

4. இந்த அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வு 01.01.2022 தேதி முதல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து வரவு வைக்கப்படும் தீர்ந்த சரக்குகளுக்கு மட்டும் அளிக்கப்பட வேண்டும்.

5. மேற்படி அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வு அரசின் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் கைத்தறி நெசவாளர்களுக்கும் பொருந்தும்.

6. மேற்படி அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வினை அமல்படுத்திட அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து சரக துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

7. உயர்த்தப்பட்ட அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வு குறித்து அனைத்து நெசவாளர்களும் அறியும் வண்ணம் சங்க அறிவிப்பு பலகையில் உரிய அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

-3

8. உயர்த்தப்பட்ட அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வு வழங்கப்படவில்லையென எவ்வொரு நெசவாளர்களிடமிருந்தும் புகார் எழாதவண்ணம் சம்மந்தப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் முறைப்படி அமல்படுத்துவதை சரக துணை/உதவி இயக்குநர்கள் விழிப்புணர்வுடன் கண்காணிக்க வேண்டும்.

9. மேற்படி அடிப்படை கூலி மற்றும் அகவிலைப்படி உயர்வினை அமல்படுத்திய விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்துமாறும், செயல்முறைகள் ஆணையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறும் அனைத்து சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இவ்வாணை 01.01.2022 தேதி முதல் செயலாக்கம் பெறுகிறது.

ஒம்/-ஆணையர்

16/11/2021

ஆணையருக்காக

பெறுநர்

அனைத்து சரக துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள்.

16.11.2021

நகல்

1. தலைவர் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், சென்னை - 8.
2. அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்க நிர்வாக இயக்குநர்கள். (சரக துணை/ உதவி இயக்குநர்கள் மூலமாக)
3. இயக்கக "ப்பி1" மற்றும் "ப்பி2" பிரிவுகள்
4. இருப்புக் கோப்பு.